# வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடாவின் தோற்றமும் வளர்ச்சியும்

தீவகத்தின் கலைக் கோயிலாகத் திகழும் வேலணை மத்திய கல்லூரியின் (வேலணை மத்திய மகா வித்தியாலயம்) பழைய மாணவர் சங்கமானது முன்னாள் அதிபர்கள் அமரர் திரு.பொ.கேதாரநாதன் திரு.சு.கலாதரன் மற்றும் பிரதி அதிபர் திரு.பொன் ஈசன் ஆகியோரது வேண்டுகோளுக்கிணங்க 1995ம் ஆண்டு ஆவணி மாதம் 2ம் நாள் (02-08-1995) அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுக் கனடாவின் ஒன்ராரியோ மாகாணச் சட்டவிதிகளுக்கமைய இலாப நோக்கற்ற அமைப்பாகப் பதிவு செய்யப்பட்டுக் (பதிவு இலக்கம்: 1852223) கடந்த 20 ஆண்டுகளாக "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கணியன் பூங்குன்றனாரின் வாசகத்தைத் தாரக மந்திரமாகக் கொண்டு கல்லூரியின் வளர்ச்சிக்காகவும் அதன் மூலம் எமது தாயக மக்களின் முன்னேற்றத்திற்காக மட்டுமன்றி இங்குள்ள பழைய மாணவர்கள், முன்னாள் அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலன் மற்றும் மகிழ்ச்சிக்காகவும் சிறந்த முறையில் தன்னலமற்ற சேவையாற்றி வருவது இங்குள்ள நேர வசதியின்மையைக் கருத்தில் கொள்ளுமிடத்து பாராட்டுதற்குரியதாகும்.

இச்சங்கம் தனது நீண்டகாலச் சிறப்பான செயற்பாடுகளின் மூலம் கனடாவில் இயங்கும் மூத்த மற்றும் முதன்மையான பழைய மாணவர் சங்கங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது.

குறிப்பாகக் கடந்த நான்காண்டுகளாக இச்சங்கம் நடைமுறைப்படுத்திவரும் அர்த்தமுள்ள செயற்திட்டங்கள் மிகவும் பயனுள்ளதும் அனைவராலும் பாராட்டப்பட்டும் மற்றவர்களால் பின்பற்றப்பட்டும் வருகின்றதென்றால் அது மிகையல்ல. இதற்குத் தூய்மையான சிந்தனை, உயர்ந்த இலட்சியம், செம்மையான செயற்பாடு, உண்மையான உழைப்பு, சிறந்த நிர்வாகம் என்ற எமது இலக்கும் அதை அடைய நாம் பின்பற்றுகின்ற இலக்கணமும் பழைய மாணவர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்களின் ஆதரவும்தான் காரணங்கள் என்பதைக் கூறிக்கொள்வதில் பெருமையும் பெருமகிழ்ச்சியும் அடைகின்றேன்.

சங்கத்தின் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதற்கு அடுத்துவரும் நிர்வாகங்களுக்கும் தங்கள் நல்லாதரவு தொடரவேண்டுமென அன்புரிமையுடன் கேட்டுக்கொள்வதோடு இதுவரை வழங்கிய ஆதரவிற்கு சங்கத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியையும் இவ்வரிய சந்தர்ப்பத்தில் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நிறைவாக இச்சங்கம் கனடாவில் வாழும் வேலணை மத்திய கல்லூரியின் அனைத்துப் பழைய மாணவர்களையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்றமையால் சங்கத்தின் செயற்பாடுகளில் பங்கு கொள்வது பழைய மாணவர்கள் அனைவரது உரிமையும் கடமையுமாகும். எனவே தங்களது பங்களிப்பின் அவசியத்தை உணர்ந்து குறைந்த பட்சம் பொதுக்கூட்டம், வருடாந்த ஒன்றுகூடல் போன்ற முக்கிய நிகழ்ச்சிகளிலாவது அவரவர் நேர வசதிக்கேற்பப் பங்குபற்றுவதன் மூலம் சங்கத்தின் வளர்ச்சியிலும் அதன்மூலம் எமது கல்லூரியின் வளர்ச்சியிலும் பங்கேற்குமாறு சங்கத்தின் சார்பில் பணிவன்புடனும் சகோதர பாசத்துடனும் கேட்டுக்கொள்கின்றேன்.

அன்று எம்மையும் எமது குடும்ப உறுப்பினர்களையும் வகுப்பறையில் சுமந்து அறிவையும் ஒழுக்கத்தையும் ஒருங்கே ஊட்டி வளர்த்து எம்மை ஆற்றலில் சிறந்தோர்களாக்கி இன்று நல்வாழ்வு வாழவைத்த எமது கல்லூரி அன்னைக்கு நாம் செய்யும் நன்றிக்கடன் இதுவேயாகும்.

"நன்றே செய்வோம் அதையும் இன்றே செய்வோம்"

**சி. இளஞ்செழியன் (தலைவர்)**
**வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்-கனடா**

பிற்குறிப்பு: சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் வழமைபோல் மார்ச் மாதம் நடைபெறவுள்ளது. விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.